Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 4, 2021

வியாழக்கிழமை 04 நவம்பர் 2021 | ஒளி: 07 கதிர்: 144 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றுக்கு

## நாளை விசேட விடுமுறை

தீபாவளி பண்டிகையைக் கருத்திற் கொண்டு, மத்திய, ஊவா, சப்ரகமுவ, வடக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (05) விசேட விடுமுறை வழங்குவதற்கு அந்தந்த மகாண ஆளுநர்கள் தீர்மானித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



தமிழ்மிரர் வாசகர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகள்

## ஆளுநருக்கு எதிரான மனு தள்ளுபடி



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னாள் ஆளுநர் ராஜித கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (03) நிராகரித்தது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட

### தலைவர்களின் வாழ்த்துகள்

தீபத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் 'தமிழ்மிரர்' சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இந் நன்னாளில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தலைவர்களின் வாழ்த்து செய்திகள், பக்கம் - 03, 04, 05 ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## சீ.ஐ.டிக்கு செல்ல மறுத்தார் சிறில்

உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை காரணத்தால், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்கு ஆஜராக முடியாது என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு, நேற்று (03) அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல் உண்மைகளை வெளிப்படுத்த

# இறுதி மூச்சுவரை போராடுவோம்



ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொண்டு வரும் போராட்டத்தில் நாங்கள் கொல்லப்பட்டாலும் தொடர்ந்தும் போராடுவோம் என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் முன்கூட்டிய தகவல்கள் கிடைக்கப் பெற்ற போதும் பாதுகாப்பு தரப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் தங்களது பாதுகாப்பினை மட்டும் உறுதி செய்து கொண்டனர் எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



## பிரதமரின் தீபாவளிக் கொண்டாட்டம்...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரி மாளிகையில் இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுடன் தீபாவளிப் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.



## அரச தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு

வர்த்தகம், சுற்றுலா, கல்வி உள்ளிட்ட பல துறைகளின் மேம்பாடு தொடர்பில், உலக நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

தொடர்ச்சி P2

செயலணி தொடர்பில் அதிருப்தி

## இராஜினாமா செய்கிறாரா நீதியமைச்சர்



ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டமை காரமாண அதிருப்தியடைந்த நீதி அமைச்சர் அலி சப்ரி, தனது பதவியை இராஜினாமா செய்ய தயாராகி வருவதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அரசாங்கம் கூறும் வளங்கள் எங்கே?



இலங்கையில் பாரிய எரிபொருள் மற்றும் எரிவாயு வளங்கள் இருப்பதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும் அவ்வாறான ஒரு வளத்தை அரசாங்கத்தால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின்

தொடர்ச்சி P2

தென் பகுதி தொல்பொருள்களை

## காவலரண் அமைத்து பாதுகாக்கவும்

### தமிழர் பகுதிகளில் வேண்டாம்

■ கா.கிருஸ்ணா



தமிழர் பகுதி தொல்பொருள்களை தமிழர்கள் பாதுகாப்பார்கள்; முடியுமானால், தென் பகுதி தொல்பொருள்களை பாதுகாக்க இராணுவத்தினரையும் பொலிஸாரையும் கொண்டு காவலரண் அமைத்து பாதுகாப்பு வழங்குங்கள் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் (ஈபிஆர்எல்எப்)

தொடர்ச்சி P2

யுகதனவி மின்நிலைய சர்ச்சை



## எதிர்க்கட்சியின் மனுவை பரிசீலிக்கத் தீர்மானம்

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலைய ஒப்பந்தம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியால் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை பரிசீலிக்க உயர்நீதிமன்றம், நேற்று (03) திகதியை நிர்ணயித்தது.

தொடர்ச்சி P2



தொழிற்சங்கங்களும் பெற்றோரும்

## அரசாங்கத்துக்கு எதிராக அணி திரண்டனர்

தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிராக துறைமுகங்கள், மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள், கொழும்பில் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்த அதேவேளை, கல்வியாளர்களை குரோதப்படுத்துவதையும் மாணவர்களை சிரமப்படுத்துவதையும் அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்று கோரி பெற்றோர்களும் நாடளாவிய ரீதியில் நேற்றையதினம் (03) போராட்டம் நடத்தினர்.

தொடர்ச்சி P2

இளம் தலைமுறையைப் பார்க்க

## இப்போதா கண் திறந்தீர்கள்?

■ என்.ஆராச்சி



அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது சுவர்களில் சித்திரம் வரைந்த இளம் தலைமுறையினர், கடவுச்சீட்டு வரிசையில் காத்திருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு ஆட்சியாளர்கள் கண்களைத் திறந்தது இப்போதா என்று அரசாங்கத்திடம் கேட்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தடையில்லா மின்சாரம்



பல தொழிற்சங்கங்கள் நேற்று (03) முன்னெடுத்த போராட்டத்தில் இலங்கை மின்சார சபையின் பெரும்பான்மையான ஊழியர்கள் கலந்து கொள்ளவில்லை என மின்வலு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கமே பொறுப்பு



நாடு இருளில் மூழ்குவதைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்திய மக்கள் விடுதலை முன்னணி, திரவ எரிவாயு விநியோகம் மற்றும் கெரவலப்பிட்டிய அனல்மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைக்கும்

தொடர்ச்சி P2

LK Newspaper Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஆளுநருக்கு எதிரான மனு தள்ளுபடி

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
எந்தவொரு சட்ட அடிப்படையும் இன்றித் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணை செய்யாமலேயே தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் செய்த ஆட்சேபனையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.
சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதால், அரசியலமைப்பின் 35ஆவது பிரிவின் கீழ் அவரது நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என ஆட்சேபனை தெரிவித்தார்.
தென் மாகாண முன்னாள் ஆளுநர் ராஜித கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த மனுவில், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், முன்னாள் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டி.எம்.ஜே.வை. பி. பெர்னாண்டோ ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.
அஜித் நிவாட் கப்ரால் ஆளுநராக இருந்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி முறையான கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்த போதிலும் இதுவரை அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீ.ஐ.டிக்கு செல்ல மறுத்தார் சிறில்

அருட்தந்தை சிறில் காமினியால் ஏற்கெனவே ஒருவார கால அவகாசம் கோரப்பட்ட நிலையில், நேற்று (03) காலை 9.30 அளவில் வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.
எனினும், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான விசாரணைகள் எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், சட்டத்தரணியூடாக எழுத்து மூலம் பதில் வழங்கியுள்ளார்.
இதேவேளை, வாக்குமூலம் பெறுவதற்காக அழைத்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தம்மை கைதுசெய்யவதற்கான தடையுத்தரவை வழங்குமாறு கோரி அருட்தந்தை சிறில் காமினி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை எதிர்வரும் 8ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க உயர்நீதிமன்றம், நேற்று (03) தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.
நேற்று முன்தினம், அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி பேராயர் தலைமையில் நடைபெற்ற இணையத்தள மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில், அரச புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குற்றப்புலனாய்வு திணைக்களத்திடல் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.
அதற்கமையவே விசாரணைகளை முன்னெடுப்பதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம், அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோவுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

## இறுதி மூச்சுவரை போராடுவோம்

தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த கட்டுவாப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து மேலும் தெரிவித்த அவர்,
தாக்குதல் நடைபெற்ற போது மைத்திரிபால சிறிசேனவும், பாதுகாப்பு தரப்பினரும் தங்களது பாதுகாப்பினை மட்டும் கருதிற் கொண்டு செயற்பட்டதாகக் குறிப்பிட்டார்.
மேலும் முன்னாள் ஜனாதிபதியும், பாதுகாப்புப் படையினரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து தங்களுக்கு இடையே மட்டும் கடிதங்களை பரிமாறிக் கொண்டனர் எனவும் தெரிவித்தார்.
இந்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த ஆணைக்குழுவுக்காக 600 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார்.
ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாத காரணத்தினால் இந்தப் பணம் விரயமாகின்றது என்றும் தெரிவித்தார்.
எங்களில் சிலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன் ஆஜராவது அல்லது எங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவது நியாயமில்லை என்றும் நாங்கள் எங்கள் சந்தேகங்களை வெளிப்படுத்தும்போது, எம்மீது அரசியல் முத்திரைகளை குத்துவது நியாயமற்றது எனவும் குறிப்பிட்டார்.

## எதிர்க்கட்சியின் மனுவை பரிசீலிக்க தீர்மானம்

உயர்நீதிமன்ற நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியரடங்கிய நீதியரசர்கள் குழாம், மனு தொடர்பான பரிசீலனைக்காக எதிர்வரும் 12ஆம் திகதியை நிர்ணயித்தது.
ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பிரதமர் மஹிந்த மற்றும் ஏனைய அமைச்சரவை உறுப்பினர்கள், யுகதனவி மின் உற்பத்தி நிலைய உரிமையாளர் வெஸ்ட் கோஸ்ட் பவர் பிரைவேட் லிமிடெட், இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கிய அமெரிக்க நிறுவனமான நியூ போட்ரெஸ் எனெர்ஜி, சட்டமா அதிபர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.
யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான 40% பங்குகளை பிரதிவாதியான அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்ற அமைச்சரவையின் தீர்மானம் நியாயமானது அல்ல என மனுதாரர் தெரிவித்துள்ளனர்.
இலங்கையில் எரிவாயு உற்பத்தியின் ஏகபோக உரிமையானது உரிய பரிமாற்ற நடவடிக்கை மூலம் பிரதிவாதியான அமெரிக்க நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பங்குகளை வழங்குவதில் முறையான விலைமனுக்கோரல் நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதன்படி, நியாயமான ஆய்வுகள் எதுவுமின்றி உரிய பங்குகளை மாற்றுவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும், அரச பங்குகளை மாற்றுவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறும் மனுதாரர் கோரியுள்ளார்.

## அரசாங்கத்துக்கு எதிராக அணி திரண்டனர்

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராகவும் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கும் எதிராகவே பல தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்தின.
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை பிரதான களஞ்சியசாலைக்கு முன்பாக தமது படையுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியதாக எண்ணெய், துறைமுகங்கள் மற்றும் மின்சாரம் தொடர்பான கூட்டுப் படையின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.
அத்துடன், இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பும் இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.
கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலுள்ள கான் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கத்தினர் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
இதேவேளை, பாடசாலை மாணவர்களின் பெற்றோரும் ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கங்களும் நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகளுக்கு முன்பாக போராட்டங்களை முன்னெடுத்தனர்.
ஆசிரியர் - அதிபர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க விரும்பவில்லை என்றும் தமது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி கல்வி கற்பிக்க பணம் இல்லை என்றும் தெரிவித்த பெற்றோர், கல்வியாளர்களை மேலும் குரோதப்படுத்துவதையும் மாணவர்களை சிரமப்படுத்துவதையும் அரசு நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தனர்.
இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவத்ததாவது,
அரசாங்கம் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் பிரிக்க முயன்றது. ஆனால் இன்று நாங்கள் அவர்கள் தவறு என்று நிரூபித்துள்ளோம். எங்களின் உரிமைக்காக நாங்கள் ஒன்றிணைந்து போராடினோம். இனியும் தாமதிக்காமல் எங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும்.
நேற்று, ஆசிரியர் பிரச்னை குறித்து பிரதமர் பேசியதை பார்த்தோம், ஆனால் அவர் தீர்வு தரவில்லை. நிதியை கையாளும் போது மிகவும் புத்திசாலி என்று கூறும் பசில் ராஜபக்ஷ, அவரை சந்திக்கவோ, பேசவோ கூட எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை. அவர் தன்னை புத்திசாலி என்று கூறிக்கொண்டாலும் ஒன்றும் செய்ய முடியாது என்பது இப்போது தெளிவாகிறது" என்றார்.

## தடையில்லா மின்சாரம்

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார். மின் இணைப்புகள் துண்டிக்கப்படாமல், தடையின்றி மின்சாரம் வழங்குவதற்கான சாத்தியம் இன்று (நேற்று) காணப்படுவதாக தெரிவித்தார்.
எரிபொருள், எரிவாயு மற்றும் பால்மா விலை அதிகரிப்பு அரசாங்கத்தின் விருப்பத்துக்கு அமைய மேற்கொள்ளப்படவில்லை என்றும் வலியுறுத்தினார்.
யுகதனவி அனல்மின் நிலைய ஒப்பந்தத்தை பொய்யான அடிப்படையில் சமூகமயமாக்க எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்துடன் தொடர்புடைய சில குழுக்களும் முயற்சிப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.
தூண்டிவிடுவதற்கான நேரம் இதுவல்ல என்றும் நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே தேவை என்றார்.

## அரசாங்கமே பொறுப்பு

நடவடிக்கையை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை நேற்று (03) வலியுறுத்தியது.
அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
நாடு மின் தடையை எதிர்கொள்ளும் பட்சத்தில், அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அரச வளங்களை கையளிக்கும் இரகசிய உடன்படிக்கைகளின் விளைவாக தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.
இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் தங்கள் தனிப்பட்ட கோரிக்கைகளுக்காக தொழிற்சங்க நடவடிக்கையை நாடவில்லை என்றும் மாறாக தேசிய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக போராடுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.
தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கு உறுதியளித்து அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாகக் கூறிய அவர், மிக முக்கியமான தேசிய சொத்தாக விளங்கும் எரிசக்தித் துறையை விற்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## நாளை விசேட விடுமுறை

மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் வெள்ளிக்கிழமை (05) விடுமுறை அளிப்பதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே அறிவித்துள்ளார்.
விடுமுறைக்கு பதில் நாளாக, நவம்பர் 13ஆம் திகதியை கருதி, கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு அனைத்து தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆளுனர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.
கடந்த ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் அனைத்து பாடசாலைகளிலும், ஆரம்பப்பிரிவுகள் கல்வி நடவடிக்கைகளுக்காக மீள திறக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை தரம் 10, 11 மற்றும் உயர்தர மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரச தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சு

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெறுகின்ற COP: 26 என்றழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பான அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் ஜனாதிபதி, செவ்வாய்க்கிழமை (02) மேற்கண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.
இலங்கை மற்றும் பஹரேன் நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பில், ஜனாதிபதிக்கும் பஹரேன் இளவரசரும் பிரதமருமான சல்மான் பீன் ஹமாட் கலீபாவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
வீட்டுப் பணிப்பெண் தொழிலுக்குப் பதிலாக தொழில் திறன்களையுடைய இலங்கையர்களுக்கு பஹரேன் நாட்டில் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு துறைகள் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையில், வாரத்தில் நான்கு நாட்களுக்கு ஸ்ரீ லங்கன் விமானச் சேவை மேற்கொள்ளப்படுகிறது. அந்த விமானப் பயண எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலா மற்றும் கல்வித் துறைகளின் மேம்பாடுகள் தொடர்பில், ஜனாதிபதிக்கும் நேபாளப் பிரதமர் பகதூர் தெவ்பாவுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பெட்ரிஷியா ஸ்கொட்லாண்ட்க்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று, கிளாஸ்கோவின் மேர்சன்ட் மாளிகையில் இடம்பெற்றது.
பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக, ஜனாதிபதியிடம் பெட்ரிஷியா அம்மையார் தெரிவித்தார்.

## இராஜினாமா செய்கிறாரா நீதியமைச்சர்

வெளிநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, நாட்டுக்குத் திரும்பியதன் பின்னர், தனது இராஜினாமா கடிதத்தை கையளிக்க தயாராகி வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று செய்தி வெளியாகியிருந்த நிலையிலேயே ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டமை தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும் தம்மை கலந்தாலோசிக்காமல் செயலணியை நியமித்ததில் அதிருப்தி அடைவதாகவும் அண்மையில் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கியிருந்த செவ்வியில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.
நாட்டில் சட்டங்களை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் இருக்கும் போது இவ்வாறான செயலணிகளை அமைப்பதில் அர்த்தமில்லை என நீதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். நீதி தீர்த்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் சட்டத்தின் பாதுகாப்பும் சர்வசாதாரணமாக வேண்டுமென்பதைக் கவனத்தில் கொண்டு, ஜனாதிபதி செயலணி பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையில் இந்த 13 உறுப்பினர்களைக் கொண்டு நியமிக்கப்பட்டது.

## 'காவலரண் அமைத்து பாதுகாருங்கள்'

தலைவருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.
மட்டக்களப்பு, வாவிக்கரை வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (02) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் என்ற போர்வையில் பல இடங்களில் அடையாளப்படுத்தப்பட்டு எல்லைக்கல் இடும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 இடங்களுக்கு மேல் தொல்பொருள் இடங்கள் உள்ளன.
"அந்த இடங்களை எல்லைக்கல் இட்டு, பௌத்த இடங்களாக அவற்றை அடையாளப்படுத்தும் முயற்சிகள் பௌத்த மதகுருக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.
"மட்டக்களப்பில் உள்ள தொல்பொருள் இடங்களை பௌத்தர்களுக்குரியது என திணிக்க முற்படும்போது, தமிழ் மக்களை சந்தேக கண்கொண்டு பார்க்கும் நிலையை உருவாக்கியவர்கள் இந்த பௌத்த குருமார்களாகும்.
"தொல்பொருள் என்பது வரலாற்று ரீதியான பகுதிகள். அவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடமை தமிழ் மக்களுக்கும் உள்ளது. தொல்பொருளை பாதுகாக்க வேண்டியவர்கள் அப்பகுதியில் உள்ள மக்கள். கடந்த காலத்தில் தமிழ் மக்கள் அதனை பாதுகாத்திருக்கின்றார்கள், பாதுகாப்போம்.
"அதனைவிடுத்து, இராணுவத்தினரைக் கொண்டு பாதுகாப்பு அரண் அமைத்து, தொல்பொருளை பாதுகாப்பது என்றால், அதனை ஏன் சிங்களப் பகுதியில் செய்யவில்லை?
"தென்னிலங்கையில் அவ்வாறான பல பகுதிகள் உள்ளன. முடியுமானால், இராணுவத்தினரையும் பொலிஸாரையும் கொண்டு, பாதுகாப்பு அரண்களை அமைத்து, அங்கு அதனை பார்க்க முடியுமா?" எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

## இப்போதா கண் திறந்தீர்கள்?

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தலைவரும் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசீம் தலைமையில் கேகாலையில் நேற்று (03) முன்னெடுக்கப்பட்ட மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்விடயத்தைத் தெரிவித்தார்.
நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கைப் பகுதிகளாகப் பிரித்து விற்பனை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரங்களை நிறைவேற்றும் போது கண்மூடித்தனமாக இருந்த அரசாங்க உறுப்பினர்கள், தற்போது கனவில் இருந்து விழித்துக் கொண்டுள்ளனர்.
அரசாங்கத்தின் பாதை தவறானது என அறிந்தால், பதவிகளை விட்டு விட்டு அரசாங்கத்தில் இருந்து வெளியே வந்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிராக அரசாங்கம் தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறது. இந்த எதேச்சதிகாரமான பழிவாங்கலுக்கு எதிராக முழு நாட்டு மக்களும் ஒன்றிணைந்து நிற்பார்கள்.
உண்மையுள்ள அருட்தந்தையரை வேட்டையாடுவதையும், உண்மைக்காக நிற்கும் குடிமக்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதையும் அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## அரசாங்கம் கூறும் வளங்கள் எங்கே?

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (03) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்விடயத்தை அவர் தெரிவித்தார்.
கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எரிவாயு வைப்பைக் கூட அரசாங்கம் பயன்படுத்துவதில்லை என குற்றஞ்சாட்டினார்.
நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்தாமல் அதிக விலைக்கு எரிவாயு மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.
அமெரிக்காவின் மின்சார மாஃபியாவுக்கு நாட்டை பலிகொடுத்து சர்வதேச மோதலில் இலங்கை தலையிடுவதாக அவர் தெரிவித்தார்.

LK Newspapers Viber Community

# “பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்”



இவ்வார இறுதியில் தொடர் விடுமுறை வருவதால் பலர் பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பார்கள். எனவே, முடிந்தவரை பயணங்களைத் தவிர்ப்பது மிகவும் முக்கியமாகுமென விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த நிபுணர் ஹேமந்த ஹேரத், வைத்தியசாலைகளுக்கு அருகில் கொரோனா வைரஸ் அறிகுறிகளை கொண்டவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல இந்த வாரத்தில் தொடர் விடுமுறைகள் வருவதால், அனைவரும் பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பார்கள். இவ்வாறான பயணங்களை முடிந்தவரையில் தவிர்க்குமாறும் நிபுணர் ஹேமந்த ஹேரத் இதன்போது தெரிவித்தார்.

நவம்பர் மாதத்தில் அதிகளவில் நாடுமுழுவதிலும் மழை பெய்யும். என்பதால் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படும். குறிப்பாக வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறான நிலையில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் அதேவேளை, அனர்த்தங்களில் ஏற்படும் பாதிப்புக்களையும் தவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

# “மக்களின் குரல்களுக்கு செவிசாய்க்கவில்லை”

நாட்டு மக்களின் குரல்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை என்பதாலேயே நாடு முழுவதிலும் போராட்டங்கள் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்குப் பிரச்சினை இருப்பதாலேயே அவர்கள் வீதிக்கு இறங்கிப் போராடி வருகிறார்கள். விவசாயிகளுக்கு மட்டுமல்ல; அனைத்துத் துறையினருக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. நாட்டு மக்களின் பிரச்சினைகளை அரசாங்கமே தீர்க்கவேண்டும். அவற்றைச் செய்வதற்குத்தான் அரசாங்கம் இருக்கிறது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, எனினும் நாட்டு மக்களின் பிரச்சினையை அரசாங்கம் தீர்க்காமையே பிரச்சினைகள் அதிகரித்தமைக்கான காரணம். குறிப்பாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. நாட்டிலுள்ள எந்தவொரு பிரச்சினையை கூட இந்த அரசாங்கம் தீர்க்கவில்லை. இதனாலேயே அரசாங்கத்தை நாம் 'பெயில்' என்கிறோம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.



# எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

ஐக்கிய இளைஞர் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் எதிர்கால செயற்றிட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் இல்லத்தில் நடைபெற்றது.

இதில், ஐக்கிய இளைஞர் சக்தியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மயந்த திஸாநாயக்க மற்றும் ஐக்கிய இளைஞர் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயலாளரும், அமைப்பாளருமான நிஸ்கான் முகம்மட் ஆகியோருக்கிடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் எதிர்கால நலன் கருதி கல்வி, ஊடகம், விளையாட்டு, கலாசாரம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றையும் நிஸ்கான் முகம்மட், தவிசாளரிடம் கையளித்தார்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இச்செயற்றிட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடினர். இதில்,பொத்துவில் பிரதேச அமைப்பாளர் ஆஷிக் கபையிரும் கலந்து கொண்டார்.



சமத்துவமாய் வாழ

# வலுவான அரசியலமைப்பு வேண்டும்

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொனிப் பொருளின் ஊடாக சகல மக்களும் சமத்துவமாய் வாழும் வலுவான அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்,

தீபாவளி வாழ்த்து செய்தியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதானது, அறம் வெல்லும், அநீதி தோற்கும்; என்பதே இதுவரைகால மனிதகுல வரலாறு. இருண்ட யுகத்தில் இருந்து மீள நிமிர்ந்து வரும் தமிழ் மக்களின் வாழ்விலும் நித்திய ஒளி வீச்சின் வருகை நிகழ்ந்தே தீரும்.

ஆனாலும், அக்கறையும் அனுபவமும் நிறைந்த ஆற்றல் மிக்கவர்களின் அறிவாயுதம் ஒன்றே தேசிய நல்லிணக்க வழி நின்று எமது மண்ணில் மாற்றங்களை உருவாக்கும்.

மாறாக, அறம் மறந்த அரசியலோ, விவேகமற்ற வெற்று வீரப்பேச்சுகளோ, திட்டமில்லாத வெறும் கூட்டுத் தீர்மானங்களோ அநீதிகளை சந்தித்த எமது மக்களின் வாழ்வில் அறம் வெல்ல ஒருபோதும் உதவாது.

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொனிப் பொருளின் ஊடாக சகல மக்களும் சமத்துவமாய் வாழும் வலுவான அரசியலமைப்பை உருவாக்க, மதிநுட்ப வழி நின்று எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் தோறும் நித்திய ஒளியேற்ற உழைப்பதில் வெற்றி காண்பதே தீபாவளித் திருநாளை கொண்டாடும் எமது மக்களுக்கு நாம் வழங்கும் பண்டிகை நாள் பரிசாகும்.



**“அக்கறையும் அனுபவமும் நிறைந்த ஆற்றல் மிக்கவர்களின் அறிவாயுதம் ஒன்றே தேசிய நல்லிணக்க வழி நின்று எமது மண்ணில் மாற்றங்களை உருவாக்கும். மாறாக, அறம் மறந்த அரசியலோ, விவேகமற்ற வெற்று வீரப்பேச்சுகளோ, திட்டமில்லாத வெறும் கூட்டுத் தீர்மானங்களோ அநீதிகளை சந்தித்த எமது மக்களின் வாழ்வில் அறம் வெல்ல ஒருபோதும் உதவாது**

# சுபீட்சம் மிக்கதொரு தேசமாக மலர இத்திருநாள் அமையட்டும்

அனைவரதும் அபிலாசைகளும் நிறைவேறி, இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதோர் தேசமாக மலரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' எனும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்கு அமைவாக, ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதை நோக்கி, பல தடைகளைத் தாண்டி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

அனைத்துத் துறைகளிலும் நம் தேசம் முன்னேற்றம் காண வேண்டும் என்பதே எம் அனைவரினதும் பெருவிருப்பாகும்.

இன்று உலகையே அச்சுறுத்திவரும்கொரோனாத் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியோடு, பல முன்னேற்றகரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இருள் நிறைந்த பாதைக்கு ஒளி இருந்தால் அதுவே நாம் செல்லும் வழிக்குத் துணையாக அமையும். அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாளாகும். இந்துக்கள் அனைவராலும் பக்தியோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் இத்தீபாவளித் திருநாளில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்துவைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம். இந்த ஒளியை நாம் அணைய விடாமல் பாதுகாத்து மறுபடியும் இருளுக்குள் மூழ்காமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என இலங்கைத்தாயின் பிள்ளைகளை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.




**“இருள் நிறைந்த பாதைக்கு ஒளி இருந்தால் அதுவே நாம் செல்லும் வழிக்குத் துணையாக அமையும். அருட் தீபமாகிய ஆன்மீக ஞான ஒளியை இறைவழிபாடு மூலம் பெறும் சிறப்பு வாய்ந்த நன்னாளே தீபாவளித் திருநாளாகும். இந்துக்கள் அனைவராலும் பக்தியோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் இத்தீபாவளித் திருநாளில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்துவைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம்.**

# அறத்தின் ஆட்சியையும் ஆணவத்தின் வீழ்ச்சியையும் குறிக்கும் தீபாவளி

தீபத்திருநாள், அறத்தின் ஆட்சியையும் ஆணவத்தின் வீழ்ச்சியையும் குறிக்கின்ற நாளாகும். தாமதித்தாலும் வாய்மையே இறுதியில் வெல்லும் என்பதையும்; காரிருள் மறைந்து, இன்பங்கள் பெருகி, நலமும் வளமும் பெருகும் என்பதே இந்துக்களின் நம்பிக்கை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுவது, சுற்றாடலுடன் ஒன்றுபட்டுள்ள பருவ மாற்றங்களோடு, பண்டைய காலந்தொட்டு மானிடர்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஆன்மீகப் பரிமாறல்லை மிகவும் உற்சாகமாகவும் பக்தியுடனும் கொண்டாடுகின்ற தீபாவளி நன்நாள், சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும், மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

தீபாவளித் திருநாளில் பிரபஞ்சத்துக்கு பிரவேசமாகும் சுப சக்தியால் உலக மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சி, சௌபாக்கியம், செல்வம் மற்றும் தெய்வ அருள் கிடைக்கவேண்டும் என்று, இந்தத் தீபத் திருநாளில் பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதியின் வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**“சுற்றாடலுடன் ஒன்றுபட்டுள்ள பருவ மாற்றங்களோடு, பண்டைய காலந்தொட்டு மானிடர்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஆன்மீகப் பரிமாறல்லை மிகவும் உற்சாகமாகவும் பக்தியுடனும் கொண்டாடுகின்ற தீபாவளி நன்நாள், சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும், மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துகின்றது. தீபாவளித் திருநாளில் பிரபஞ்சத்துக்கு பிரவேசமாகும் சுப சக்தியால் உலக மக்கள் யாவருக்கும் மகிழ்ச்சி, சௌபாக்கியம், செல்வம் மற்றும் தெய்வ அருள் கிடைக்கவேண்டும் என்று, இந்தத் தீபத் திருநாளில் பிரார்த்திக்கிறேன்**

# ஜனாதிபதி செயலணிக்கு அதிகாரம் இல்லை

'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பில் சட்டத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதி செயலணிக்கு இல்லை. பாராளுமன்றத்துக்கே அதற்கான அதிகாரம் உள்ளதென ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேயவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (03) தீபாவளி கொண்டாடப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் ருவன் விஜேவர்தன, நாட்டின் சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்குத்தான் உள்ளது. இந்த தீபாவளியின் தீபவொளி ஜனாதிபதியின் அறியாமை போக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியால் நாட்டின் சட்டங்களை உருவாக்க முடியாது. நாட்டின் சட்டங்களை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உள்ளது எனவும் முன்னாள் அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.



**“'ஒரே நாடு, ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியால் நாட்டின் சட்டங்களை உருவாக்க முடியாது. நாட்டின் சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்குத்தான் உள்ளது. இந்த தீபாவளியின் தீபவொளி ஜனாதிபதியின் அறியாமை போக்க வேண்டும்**

# 42 பயணிகளை தவிக்கவிட்ட ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் விமானம்

சென்னையிலிருந்து கொழும்பு செல்லும் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானம், நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு 144 பயணிகளுடன் புறப்படத் தயாராக இருந்தது. ஆனால், அவர்களில் 42 பயணிகள் கொழும்பு வழியாக துபாய் செல்பவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் ஊழியர்கள், 42 பயணிகளையும் விமானத்தில் ஏறுவதற்கு அனுமதிக்கவில்லை. இதனால், அதிகாரிகளிடம் முறையிட்டனர். அதற்கு அதிகாரிகள் கூறுகையில், “சென்னையில் எடுத்துள்ள கொரோனா சோதனை முடிவுகள், ஆறு மணி நேரத்துக்கு மட்டுமே செல்லுபடியாகும். கொழும்புக்குச் சென்றால் மீண்டும் கொரோனா பரிசோதனை இடம்பெறும்” எனத் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து துபாய்க்கு உடனடியாக விமானம் இல்லை. எனவே, அந்த விமானத்தில் ஏறினாலும், துபாய் விமான நிலையத்தில் வெளியே விடமாட்டார்கள். 14 நாள்கள் தனிமைப்படுத்தி விடுவார்கள். எனவே, நீங்கள் சென்னையில் சோதனை செய்தாலும், இலங்கையிலும் மற்றொரு கொரோனா பரிசோதனை செய்ய வேண்டும். அதற்கு சம்மதம் தெரிவித்தால் விமானத்தில் ஏற்றுகிறோம் என்றனர். ஆனால், பயணிகள் சம்மதிக்கவில்லை. இதையடுத்து, 42 பேரின் பயணத்தை ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் ரத்து செய்து, 102 பயணியருடன் புறப்பட்டது.



# 4 கிலோ கஞ்சாவுடன் இளைஞர் கைது

மன்னாரில் 4 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவைத் தன்வசம் வைத்திருந்த நபரைப் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றில் ஆஜரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் - மூர்வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜரப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

LK Newspapers Viber Community



# 'கடவுளின் திருவடிகளை நாடினால் துன்பம் இல்லை'



விருப்பு, வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவருக்கு எப்போதும் எவ்விதத்திலும் துன்பம் இல்லை என சுட்டிக்காட்டி, இனிய தீபத் திருநாள் நல் வாழ்த்துகள் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்று உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# 'அரக்கர்கள் அழியும் தீபாவளியாக அமையட்டும்'

■ கே.எல்.ரீ.யுதாஜித்



இன்றைய தீபாவளி, பெரும்பான்மையினரின் மனங்களிலுள்ள நரகாசுர அரக்கர்கள் அழியும் தீபாவளியாக அமையட்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

காலங் காலமாக எம்மக்கள் அனுபவித்துவரும் இனத்துவ ரீதியான அடக்குமுறைகளுக்கு ஒவ்வொரு வருடத்திலும் தீர்வு கிடைத்துவிடும் என்றே நாம் நம்புகிறோம். வாழ்த்துகளையும் தெரிவிக்கிறோம். அதனாலேயே கூட மக்களிடம் வெறுப்புக் குடிகொண்டுவிட்டது.

கடந்த காலத்தில் யுத்தத்தின் மூலம் மக்கள் கடும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து, யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் சர்வதேசத்தின் நீதியை எதிர்பார்த்துக் கொண்டே 12 வருடங்களைக் கடத்திவிட்டார்கள்.

தீபத்திருநாள் என்பது நரகாசுரனை வதம் செய்த தினமாகும். இம்முறை இந்தத் தீபாவளியாகிலும் பெரும்பான்மையினரின் மனங்களிலுள்ள நரகாசுரன்களை அழிப்பதாக அமைய வேண்டும். வெறுமனே கொண்டாட்டம், மகிழ்ச்சி என்பவைகள் மாத்திரம் பண்டிகையல்ல என்பதனை இலங்கை அரசாங்கம் புரிந்துகொள்கின்ற திருநாளாக இன்றைய தினம் அமையவேண்டும்.

அசுரர்கள் அழிக்கப்பட்டு மகிழ்ச்சியைக் கொண்டாடும் இந்த நாளில் ஜனாதிபதியும் அரசாங்கமும் எதிர்பார்க்கின்ற சுபீட்சமான நாடு உருவாக வேண்டுமானால் தமிழ் மக்களுக்கான சுதந்திரம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## 3ஆவது டோஸ் ஆரம்பம்...

முல்லைத்தீவு – உண்ணாப்புலவு வைத்தியசாலை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களில், மூன்றாவது பூஸ்ட் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள், நேற்று (02) முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் ஏனைய முன்களப் பணியாளர்கள் பலர் தடுப்பூசிகளை செலுத்திகொண்டனர். (படப்பிடிப்பு: சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்)

புத்தாண்டில் மறந்ததை

# 'தீபாவளியில் மறக்க வேண்டாம்'

■ எஸ். நிதர்ஷன்

பொதுமக்கள் மிகவும் பொறுப்புடனும், அவதானத்துடனும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி தீபாவளி பண்டிகையை கொண்டாட வேண்டுமென எதிர்பார்க்கிறோம் என, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இல்லாவிடின், சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் ஏற்பட்டதைப் போன்று, பாரியதொரு தொற்றுப் பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், அவர் எச்சரித்தார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், நாட்டில் இந்துப் பெருமக்கள் தற்போது தீபாவளிப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர் எனவும் தற்போது நாட்டில் கோவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கையும், இறப்புக்களின் எண்ணிக்கையும் பாரியளவில் வீழ்ச்சி அடைந்திருந்தாலும் தினமும் நாட்டில் 500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்படுவதுடன், இறப்புக்களும் தொடர்ந்து ஏற்பட்ட வண்ணம் உள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்டங்களின் பின்னர் தமது நாட்டில் பாரியதொரு கோவிட்-19 தொற்றுப் பரம்பல் ஏற்பட்டதை நினைவுபடுத்த விரும்புவதாகத் தெரிவித்த அவர், இந்நிலையில் பொதுமக்கள் மிகவும் பொறுப்புடனும், அவதானத்துடனும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி இப்பண்டிகையை கொண்டாட வேண்டுமென எதிர்பார்க்கிறோம் எனவும் இல்லாவிடின், சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் ஏற்பட்டதைப் போன்று பாரியதொரு தொற்றுப் பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் எச்சரித்தார்.



'எனவே, இந்நிலையை கருத்தில் கொண்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் தீபாவளி பண்டிகையை கொண்டாடுவது சம்பந்தமாக பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்கப்பட்டள்ளது. தீபாவளி பண்டிகைக்காக பொதுமக்கள் புத்தாடைகளை வாங்குவதற்காக வர்த்தக நிலையங்களில் ஒன்று கூடும்போதும், கோவில்களில் வழிபாடுகளுக்காக ஒன்றுகூடும் போதும் கோவிட் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

'பொதுமக்கள் அனைவரையும் இப்பண்டிகை காலத்தில் பொறுப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறு வேண்டிநிற்கிறோம்' எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

# விபத்தில் இருவர் காயம்



■ க. அகரன்

வவுனியா - வைரவபுளியங்குளத்தில், நேற்று (03) பிற்பகல் இடம்பெற்ற விபத்தில், இருவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா  ரயில் நிலைய வீதியில் இருந்து குருமன்காடு நோக்கி ஒரே பகுதியால் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி, இந்த விபத்து சம்பவித்துள்ளது.

மதங்களுக்கு எதிரான வன்முறைகள்

# 'ஒற்றுமையை சீர்குலைக்கும்'

■ எஸ் தில்லைநாதன்



மதங்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்தில் எதிர்பாராத விதமான பாரிய விளைவுகளுக்கு வித்திட்டு ஒற்றுமையை சீர்குலைக்கும் என, பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

மன்னார் - முசலி பிரதேசத்தில் உள்ள பாசித்தென்றல் குளத்தடி பாலைமரத்தடிப் பிள்ளையார் கோவிலில் காணப்பட்ட பிள்ளையார் திருவுருவம் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், 10 மாதங்களுக்கு முன்னர் மத வெறியர்களால் உடைத்தெறியப்பட்ட முசலி- பாலைமரத்தடிப் பிள்ளையார் திருவுருவம் மீண்டும் 07ஃ10ஃ2021 அன்று மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் மீண்டும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக உருத்திர சேனை அமைப்பால் சிலாவத்துறை விகாராதிபதியின் பங்கேற்புடன் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் சிலை, காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயற்பாடாகும் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஸ்கந்தஷஷ்டி உற்சவம்

# இம்முறை நேரலை

■ எஸ். நிதர்ஷன்

நல்லூர் கந்தசுவாமி கோவிலில், 'பிலவ' வருட ஸ்கந்தஷஷ்டி உற்சவம், எதிர்வரும் 05ஆம் திகதி ஆரம்பமாகி 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சுகாதார துறையினரது அறுவுறுத்தலின் படி, பக்தர்கள் வீடுகளில் இருந்து தரிசனம் செய்யும் பொருட்டு, நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தால், உற்சவத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை கோவில் உத்தியோகபூர்வ YouTube தளத்தில் நேரலையை ஒளிபரப்பப்படவுள்ளது.

ஆகையால், ஸ்கந்தஷஷ்டி உற்சவ காலத்தில் உற்சவ நேரங்களின் போது நாட்டின் தற்போதைய சுகாதார நடைமுறைகளின் படி, பக்தர்கள் கோவிலிலும் வெளிவளாகத்திலும் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் பொருட்டு, உற்சவ நேரங்களின் போது கோவிலுக்கு வருவதைத் தவிர்த்து, வீடுகளில் இருந்து தூர தரிசனம் செய்யுமாறு, தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

Youtupe தள முகவரி - https://youtube.com/channel/UCmKSI9nBdK-3SRzJEpERINQ/featured



சுகாதார வழிமுறைகளை மிக

# 'இறுக்கமாக கடைப்பிடிக்கவும்'

■ எஸ்.றொஸேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் தற்போது 3ஆவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் சுகாதார வழி முறைகளை தொடர்ச்சியாக கடைப்பிடித்து தீபாவளி மற்றும் அதனை தொடர்ந்து வருகின்ற கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகை காலங்களில் சுகாதார வழிமுறைகளை மிக இறுக்கமாக கடைப்பிடித்தால் மட்டுமே, மீண்டும் ஏற்படக்கூடிய கொரோனா தொற்று நிலமையை தவிர்த்துக் கொள்ள முடியும் என, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், நேற்று (03) காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்தில், செவ்வாய்க்கிழமை (02) புதிதாக 22 நபர்கள் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் 7 தொற்றாளர்கள், பண்டிவிரிச்சான் வைத்தியசாலையிலும் 5 தொற்றாளர்கள், நானாட்டான் வைத்தியசாலையிலும் 4 தொற்றாளர்கள், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

கடந்த ஒக்டோபர் மாதம் நாள் ஒன்றுக்கு 8 அல்லது 9 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், கடந்த மூன்று நாள்களாக நாள் ஒன்றுக்கு 17 தொற்றாளர்கள் வீதம் குறித்த தொற்று அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது எனவும், அவர் கூறினார்.



பயணத்தடைகளின் தளர்வும் சுகாதார வழிமுறைகள் பின்பற்றுவதில் மக்கள் காட்டுகின்ற அசமந்தபோக்கு ஆகிய காரணங்களால், மீண்டும் ஒரு தொற்று பரவும் நிலை மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது எனவும், அவர் தெரிவித்தார்.

'தீபாவளி மற்றும் அதனை தொடர்ந்து வருகின்ற கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் சுகாதார வழிமுறைகள் மிக இறுக்கமாக கடைபிடித்தால் மட்டுமே மீண்டும் ஏற்படக்கூடிய தொற்று நிலைமையை தவிர்த்துக் கொள்ள முடியும்.

'அத்துடன், பொது மக்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஓரளவுக்கு முடிவடைந்துள்ளது' என்றார்.

முகமாலையில்


# 316 ஏக்கர் காணி விடுவிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - முகமாலை பகுதியில், கண்ணிவெடி அகற்றப்பட்ட 316 ஏக்கர் காணி, நேற்று (03) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது

தொடர்ந்து, கூட்டுறவுச் சங்கங்களின் இரண்டு தேங்காய் எண்ணெய் ஆலைகள், ஒரு தும்புத் தொழிற்சாலை, வெதுப்பகம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி மையம் என்பனவும், இதன்போது, மக்களிடம் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டடவாக்க இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு, குறித்த காணிகளை கையளித்துள்ளனர்.



யுத்த காலத்தில், இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் கடும் யுத்தம் இடம்பெற்ற பகுதியாகவும் முன்னரங்க பிரதேசமாகவும் முகமாலை பிரதேசம் காணப்பட்டது. இதன் காரணமாக அதிகளவு கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிக்காத வெடிப்பொருள்கள் நிறைந்த பிரதேசமாக காணப்பட்ட முகமாலையில், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தொடர்ச்சியாக கண்ணி வெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில், தற்போது கண்ணிவெடி அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசமாக உறுதிப்படுத்தப்பட்ட 316 ஏக்கர் பரப்பளவு நிலம், நெற்று பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# 4 கிலோ கஞ்சாவுடன் சிறுவன் கைது

■ எஸ்.றொஸேரியன் லெம்பேட்

மன்னார் - மூர்வீதி பகுதியில், நேற்று முன்தினம் (02) மாலை, ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை தன் வசம் வைத்திருந்த 17 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - மூர் வீதியைச் சேர்ந்த குறித்த 17 வயது பாடசாலை மாணவனிடம் இருந்து, 4 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.



மேலதிக விசாரணையின் பின்னர், குறித்த சிறுவனை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இராணுவ புலனாய்வு பிரிவினரின் இரகசிய தகவலின் அடிப்படையில், மன்னார் மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினரால், கடந்த திங்கட்கிழமை மதியம், மன்னார் - தள்ளாடி சந்தியில் வைத்து, 1 கிலோ 665 கிராம் கேரள கஞ்சாவுடன், புத்தளத்தைச் சேர்ந்த 46 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community

ஆசிரியர்– அதிபர்களுக்காக மலையகமெங்கும்

# பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

அதிபர்,ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடித் தீர்வைக் வழங்க வேண்டும் என கோரி மலையகத்தின் பெரும்பாலான நகரங்களில் நேற்று (3) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய,மொனராகலை, ஹல்துமுல்ல, பசறை, புஸல்லாவை, தலவாக்கலை, புளத்கொஹுபிட்டியபசறை, லுணுகல, கோணக்கலை, பதுளை, ஹாலிஎல உள்ளிட்ட பல இடங்களில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"ஆட்சியாளர்களே அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டிற்கு உடனடியாக தீர்வை வழங்கு, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தாதே, பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதி செய்" போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறே இந்த ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள் ஈடுப்பட்டனர்.






# மலையக அரசியல் தலைமைகளின் தீபாவளி வாழ்த்துகள்



பெருந்தோட்ட மக்களுக்கு எதிர்பார்க்கப்படும் அனைத்து வரப்பிரசாதங்களும் அவர்களது அபிலாஷைகளும் நிறைவேற்றப்படும் என்று பெரிதான நம்பிக்கை எமக்குண்டு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது தீபத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ளதாவது, மலையக மக்களின் வாழ்வுக்கும், வாழ்க்கை தர உயர்வுக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஆக்கபூர்வமான திட்டங்களை இ.தொ.கா வகுத்துள்ளது. தூரநோக்கோடு மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்த ஆண்டு இறுதியில் நல்ல பலன்கள் கிட்டிவிடும் என்று நாம் நம்புகின்றோம் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



கொவிட்-19 நோய்த்தொற்றிருந்து இலங்கைத் திருநாடு விரைவில் மீள்வதற்கும் எம் மக்களுக்கு எல்லா சுபீட்சங்களையும் தரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமைய வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இருளை அகற்றி ஒளி ஏற்றும் எமது மக்களின் உயர்ந்த பண்டிகை தீபத்திருநாளாகும். இன்றைய சூழ்நிலையில் கொவிட் 19 கொரோனா தொற்றிலிருந்து எம்மையும் எமது உறவினர்களையும், நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றவேண்டும் என தெரிவித்துள்ளார்.



"தீபத் திருநாளாம்" தீபாவளி திருநாளை உவகையுடனும் உற்சாகத்துடனும் அனைத்து மக்களும் கொண்டாடும் இந்த இனிய தருணத்தில் மக்கள் அனைவருக்கும் உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" - என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபத் தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள தீபாவளி வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

"தீபத்திருநாள் நமக்கு அதிகமான அறிவாற்றலை வழங்கி, வளர்ச்சி மற்றும் மேன்மையை அளிப்பதோடு, அறியாமை எனும் இருள் அகற்றி, ஒற்றுமை, அர்ப்பணிப்பு உணர்வை ஏற்படுத்தி, நமது நாட்டை உச்சத்துக்கு கொண்டு செல்ல வழிவகுக்கும்.

இது சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வுக்கான மிகுந்த நம்பிக்கையை கொண்டு வருவதோடு மக்களை பிரித்துவைக்கும் எல்லா வேறுபாடுகளையும் களைந்து அவர்கள் மத்தியில் சுபீட்சத்தை ஏற்படுத்துகிறது என்றும் கூறியுள்ளார்



'கொரோனா' பிரச்சினையால் வலி சுமந்த வாழ்க்கையையே பலருக்கும் வாழவேண்டியேற்பட்டுள்ளது. இந்நிலைமை நீங்கி, அனைவரது வாழ்விலும் நம்பிக்கை பிறக்க வேண்டும் என, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளரும், ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான வேலாயுதம் ருத்திரதீபன் தெரிவித்துள்ளார்.

எம்மை தற்போது சூழ்ந்துள்ள இருள் அகன்று, ஒளி பிறக்க வேண்டும். அதற்காக சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றி தீபாவளி பண்டிகையை பொறுப்புடன் கொண்டாடுவோம் என அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார். கொவிட் பிரச்சினையால் இன்று மக்களின் வாழ்வும் இருண்டுள்ளது. இன்பம் என்பது அகன்று, துன்பமே எம்மை சூழ்ந்துள்ளது. எனவே, வைரஸ் என்ற இந்த அரக்கனையும் நாம் ஒழிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

லொக்கல்ஓயா ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டவர்

# சடலமாக மீட்கப்பட்டார்

■ பாலித ஆரியவன்ஸ

பசறை- உடகம பிரதேசத்தின் லொக்கல்ஓயா ஆற்றில் நேற்று முன்தினம் (2) திகதி அடித்துச் செல்லப்பட்டவர் நேற்று (3) காலை மடுகஸ்தலாவ பிரதேசத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், பசறை- பராக்கிரம மாவத்தையைச் சேர்ந்த மொஹமட் மொஹதீன் நிலான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர், சுரங்க பாதுகாப்பு பணியாளராக கடமையாற்றி வந்துள்ளதுடன், சம்பவ தினம் லொக்கல்ஓயா ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அள்ளுண்டு செல்லப்பட்டு, நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு

# மூன்று மாதங்கள் சபை அமர்வுகளுக்குத் தடை

■ ஆ.ரமேஷ்

நுவரெலியா பிரதேச சபை ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் சீ.பி.எம்.உயன்கொட மூன்று மாதங்களுக்கு சபை நடவடிக்கையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா பிரதேச சபையின் நவம்பர் மாதத்திற்கான மாதாந்த அமர்வு சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் நேற்று (03) காலை இடம்பெற்றது.

இதன் போது, நுவரெலியா பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் உயன்கொட, நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை பரப்பி வருவதாக கண்டறியப்பட்டு ,அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் சபை தவிசாளர் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

அத்துடன் அவரை மூன்று மாதங்களுக்கு சபை அமர்வுகளிலிருந்து இடைநிறுத்தும் படி அனைத்து உறுப்பினர்களும் தெரிவித்தனர். இதனடிப்படையில் உறுப்பினர் அஜீத் உயன் கொடவின் செயற்பாடுகளை கண்டித்த தவிசாளர் வேலு யோகராஜ், இவரை சபை உறுப்பினர்களின் அனுமதியுடன் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு சபை நடவடிக்கைகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்தார்

# கட்டாக்காலி நாய்களுக்கு கருத்தடை



ஹப்புத்தளை நகரில் உள்ள கட்டாக்காலி நாய்களுக்கு, கருத்தடை செய்யும் வேலைத்திட்டம், நேற்று (3) ஹப்புத்தளை நகர சபையால் மேற்கொள்ளப்பட்டது. நகர சபையால் பிடிக்கப்பட்ட நாய்களையும் நாய்கள் மயக்கமுற்று கிடப்பதையும் படங்களில் காணலாம். (எம். செல்வராஜா)





60 மில்லியனை சுருட்ட

# முயற்சித்தவர் விளக்கமறியலில்

■ ரஞ்சித் ராஜபக்ஸ


60 மில்லியன் ரூபாயுடன் தலைமறைவாக முயற்சித்த சந்தேகநபரை, இந்த மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிபதி ஏ.ஐ.ஹெட்டிவத்த நேற்று (3) உத்தரவிட்டுள்ளார்.

42 வயதான முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஹட்டனிலுள்ள தனியார் வங்கி ஒன்றின் தானியக்க இயந்திரத்தில் வைப்பிலிடுவதற்காக, கொண்டுவரப்பட்ட சுமார் 60 மில்லியன் ரூபாயை கொள்ளையிட்டு செல்ல முயற்சித்த முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் நுவரெலியா- கெப்பெட்டிபொல பகுதியில் வைத்து , நுவரெலியா- மிபிலிமான விசேட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் 1ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து தனியார் வங்கிகளில் உள்ள தன்னியக்க இயந்திரங்களுக்கு நிரப்புவதற்கு கொண்டு வரப்பட்ட பணமே இவ்வாறு கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான சாரதியுடன்,குறித்த தனியார் வங்கியின் அதிகாரிகள் மற்றும் துப்பாக்கியுடன் பாதுகாப்பு அதிகாரி




ஒருவருடன் ஹட்டனிலுள்ள தனியார் வங்கிக்கு வருகைத் தந்துள்ளனர்.

இதன்போது சாரதியைத் தவிர ஏனைய அனைவரும் வானிலிருந்து இறங்கி, வங்கிக்குள் நுழைவதைப் பயன்படுத்திக்கொண்ட சந்தேகநபர் பணம் மற்றும் வானுடன் தலைமறைவானார்.

எனினும் அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த ஜீ.பி.எஸ். இயந்திரம் மூலம் சந்தேகநபர் வாகனத்தை செலுத்தும் வீதிகள் குறித்து ஆராய்ந்த அதிகாரிகள் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளனர். இதன்போது, வீதிகளில் வீதி தடை ஏற்படுத்தி,.குறித்த நபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், கெப்பெட்டி பொலயினை கடக்கும் பொழுது பொலிஸார் கைது செய்து, நேற்று (3) ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நடனமாடி சுகாதார அதிகாரிகளை

# மகிழ்வித்த யாசகர் ரஞ்சித் ராஜபக்ஷ



கொட்டகலை- சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட, தலவாக்கலை நகரிலுள்ள யாசகர்களுக்கு, கொரோனா இரண்டாவது தடுப்பூசி நேற்று முன்தினம் (2) செலுத்தப்பட்டது.

இதன்போது, தாம் இரண்டாவது தடுப்பூசியை செலுத்திக்கொண்ட சந்தோசத்தில், அங்கிருந்த சுகாதார அதிகாரிகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக, பெண் யாசகர் ஒருவர் நடனமாடியுள்ளார்.

இதேவேளை, தலவாக்கலை நகரிலுள்ள 15 யாசகர்களுக்கு இரண்டு தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளது என, சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்னல் தாக்கியதில் சிதறிய பாறை

# ஒருவர் பலி: இருவர் காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

நாவலப்பிட்டி- கிறீன்வூட் பகுதியில் உள்ள கல்குவாரி ஒன்றில் பணியாற்றிக்கொண்டிருந்த ஊழியர் ஒருவர், நேற்று முன்தினம் (2) மாலை மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

> " இவ்வாறு உயிரிழந்தவர் நாவலப்பிட்டி- போஹில் தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதான ரொபின்சன் என நாவலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்



இவ்வாறு உயிரிழந்தவர் நாவலப்பிட்டி- போஹில் தோட்டத்தைச் சேர்ந்த 19 வயதான ரொபின்சன் என நாவலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் நிலவும் சீரற்ற வானிலையால், குறித்த கல்குவாரியின் பாறையொன்றில் மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த பாறை துண்டுதுண்டாக உடைந்துள்ளதுடன், அதில் ஒரு துண்டு குறித்த இளைஞனின் தலையில் விழுந்தால், சம்பவ இடத்திலேயே இளைஞன் உயிரிழந்துள்ளான்.

மேலும் மற்றுமொரு கற்துண்டு பெக்கோ இயந்திரத்தின் சாரதி மீதும் விழுந்துள்ளதால் அவர் காயமடைந்துள்ளதுடன் இதன்போது நாவலப்பிட்டி- தலவாக்கலை வீதி வழியாக ஓட்டோ ஒன்றில் பயணித்த பெண்ணொருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

LK Newspapers Viber Community

# தானே தனது வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும்!

இந்துக் கலாசாரம் என்பது, பண்டிகைகள் நிறைந்தது. ஒவ்வொரு பண்டிகைக்கும், ஒவ்வொரு தத்துவதும் பண்பாட்டுப் பின்புலமும் இருக்கிறது. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய, ஒழுக்க நெறிகள், விருந்தோம்பல், உற்றார் உறவினர்களுடன் கூடிய மகிழ்ச்சியான வாழ்க்கை போன்றவற்றை, இந்தப் பண்டிகைகள் ஊடாக நாம் கற்றுக்கொள்கின்றோம்; கடைப்படிக்கின்றோம்.

தீவாவளியைத் தீமை அகன்று, நன்மை பிறக்கும் நன்னாள் என்றும் ஒளி என்பது வெற்றியின் அடையாளம் என்றும் இருள் என்பது தோல்வியின் அடையாளம் என்றும் நம் முன்னோர்கள் நம்பினார்கள். வாழ்கையில் ஒளியைக் கொடுத்து, இருளை அகற்றும் வகையிலும் ஒளியைப் போற்றும் வகையிலும் அமைந்த தீபாவளி பண்டிகையைக் கொண்டாடி வருகின்றார்கள்.

இன்று கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையின் போது, பொது மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு, பெரும்பாலான மாகாண சுகாதார சேவைகள் அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள் போன்றோர் மிகுந்த சிரத்தையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

நாடளாவிய ரீதியில், கொரோனா தொற்று தொடர்பான அச்சம் முழுமையாக நீங்காத நிலையில், தீபாவளி பண்டிகைக் காலத்தில் மக்கள் கூட்டமாக வெளியில் நடமாடுகிறார்கள். பண்டிகையைக் கொண்டாடும் வகையிலான இடங்களுக்குச் செல்லும் போது, ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டவாறான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படவே ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். பொதுவாக இந்தக் கொரோனா அச்சம் நிலவும் காலப்பகுதியில் வரும் பண்டிகைகளைப் பெருமெடுப்பில் கொண்டாடாமல் தவிர்த்துவிடுவது தொற்றுநோயிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான வழியாகும். பண்டிகைகளை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடும் பொருட்டு, சனநெரிசல் அதிகமான இடங்களான, கடைகள், கோவில்கள், பஸ்பயணம் போன்றவற்றை இயன்றளவு தவிர்த்துவிடுவதே சிறந்தது.

பண்டிகையை மகிழ்ச்சிகரமாகவும் சிறப்பாகவும் வீட்டிலிருந்தவாறே தத்தமது குடும்பத்தாருடன் மத வழிபாடுகளில் ஈடுபட்டு, விருந்துண்டு கொண்டாடுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றது.

இவ்வாறு சனநெரிசல் மிக்க இடங்களுக்குச் செல்வதன் மூலம், இருமல், தும்மல், காய்ச்சல் பிரச்சினை உள்ளவர்களை மக்கள் சந்திக்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. இதனால் கொரோனா வைரஸ் தொற்றிக் கொள்ளும் சந்தர்ப்பங்களை நாங்களாகவே உருவாக்கிக் கொள்கின்றோம். எனவே, பண்டிகையைக் கொண்டாடும் விதத்தில், தேவையற்ற விதத்தில் வெளியில் செல்வதைத் தவிர்ப்பதே, நமக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது.

விருந்தினர் வீடுகளுக்கு வரும்போதோ, வெளியில் காணும்போதோ, பாதுகாப்பான முறையில் தீபாவளி வாழ்த்துச் சொல்லி, வரவேற்றுக் கொள்வதே நிறந்தது. கைகுலுக்குவதைத் தவிர்த்து, கைகூப்பி ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்தி கொள்வது, சுகாதாரமானதுடன் நமது பண்பாட்டைப் பேணுவதாகவும் அமையும்.

கொரோனா தொற்றை இலங்கையில் இருந்து இல்லாது ஒழிப்பதற்கு, ஒவ்வொரு தனி மனிதரும் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதற்கு, சுதாதார துறையினரின் அறிவுறுத்தல்கள், கட்டுப்பாடுகளுக்கு அமைவாக, பொதுமக்களும் தங்களது நாளாந்த கருமங்களை ஆற்றுவதுடன் பண்டிகைகளையும் கொண்டாடி மகிழ்ந்து, தத்தமது வாழ்க்கையில் ஒளியேற்றிக் கொள்ள வேண்டும் என்பதே எமது அபிலாஷையாகும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிரிக்காதவன் வாழ்க்கை சுருங்கி விடுகிறது. புன்முறுவல் என்றும் அன்பினைக் காட்டும் வடிவங்கள்.

கடுப்பான முகத்துடன் இருப்பவர்களை எவருமே கண்டுகொள்ள மாட்டார்கள். ஒருவரை உடன் கவருவது, அவரின் முகம் மட்டுமல்ல, அகமூடாக வெளிப்படும் உணர்வைச் சுட்டும் உதட்டின் ஊடான சிரிப்பும்தான்.

முறைத்தபடி பார்ப்பதும் எதையாவது பேச முற்பட்டால், சிடுசிடுப்பாகப் பேசுவதை எவர்தான் இரசிக்கப் போகின்றார்கள்?

எனினும் நல்ல மனிதர்கள் கூட, மக்களுடன் பழகத் தெரியாமல் இருப்பதுண்டு. எங்களைச் சுற்றி இருப்பவர்களுடன், பழகாமல் இருக்கக்கூடாது.

இதனால், அன்புடன் பாசத்துடன் பேசும் திறன் அற்றுப்போய்விடும். இவர், 'திமிர்' பிடித்தவர் என்ற கெட்டபெயரும் வந்துவிடும். ஒருவர் பேசத் தயங்கினால், நீங்கள் அவருடன் கனிவுடன் நடந்துகொள்ளுங்கள்.

எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்கமுடியாது. வெட்க சுபாவம் சிலருக்கு உண்டு. சிரித்து மகிழ்ந்தால், எல்லோரும் அழகுதான்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

தமிழ்க் கட்சிகளின் யாழ். சந்திப்பு:

# தமிழர்களை 13க்குள் சுருக்கும் முயற்சியா?



புருஜோத்தமன் தங்கமயில்

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தும் சந்திப்பொன்று, தமிழ் பேசும் கட்சிகளுக்கு இடையில் செவ்வாய்க்கிழமை (02), யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் பங்குபற்றின. அத்தோடு, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும் பங்கெடுத்தன.

நீண்ட காலமாக நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு நடத்தப்படும் சூழல் காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில், மாகாண சபைத் தேர்தலை முன்னிறுத்திய நகர்வுகளில், அரசியல் கட்சிகள் ஈடுபடத் தொடங்கிவிட்டன.

தேர்தல் அரசியலுக்குள், தமிழ்த் தேசிய அரசியல் சுருக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில், ஒவ்வொரு தேர்தலையும் முக்கிய கட்டமாகவே கட்சிகள் அணுகும். டெலோவின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற சந்திப்பும், மாகாண சபைத் தேர்தலை முன்னிறுத்தி, தன்னை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாகக் கொள்ள முடியும்.

ஆனால், அதனையும் தாண்டிய முக்கிய நிகழ்ச்சி நிரலொன்று இருப்பதற்கான காட்சிகள் மெல்ல விரிந்து வருகின்றன.

13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட பல தரப்புகளும் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றன. ஆனால், அதனை தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்கான இறுதித் தீர்வாக, தமிழ்த் தேசிய கட்சிகள் என்றைக்குமே கருதியதில்லை.

குறிப்பாக, முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னராக ஏற்பட்ட அரசியல் இராஜதந்திர மாற்றங்களின் பின்னரும் கூட, 13வது திருத்தச் சட்டத்தினை இறுதித் தீர்வாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசிய கட்சிகள் எவையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாகாண சபைத் தேர்தல்களை தொடர்ச்சியாக புறக்கணித்துவந்த கூட்டமைப்பு, 2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்த போதும், 13ஆவது திருத்தச் சட்டத்தினை தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை. தேர்தல் பிரசாரங்களின் போதும் அதனை வெளிப்படையாகவே அறிவித்தும் இருந்தது.

2013ஆம் ஆண்டு இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றிபெற்று ஆட்சியமைத்தால், மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொண்டது போலாகிவிடும். எனவே கூட்டமைப்பு தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கை, தமிழ் சிவில் சமூக அமையத்தினால் முன்வைக்கப்பட்டது.

தேர்தலைப் புறக்கணிக்கவில்லை என்றால், கூட்டமைப்பு நேரடியாக போட்டியிடாது சுயேட்சைக்குழு ஒன்றினூடாக போட்டியிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. 'கூட்டமைப்பு நேரடியாக போட்டியிடாது விட்டால், அது அரச ஆதரவுக் கட்சிகளுக்கு வாய்ப்பாக போய்விடும். அது, ராஜபக்ஷர்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்கியதாக சர்வதேச ரீதியில் பதிவு செய்யப்பட்டுவிடும்' என்று கூறிய இரா.சம்பந்தன், கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடும் முடிவினை அறிவித்தார்.

அத்தோடு, முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னராக கூட்டமைப்பு முழுமையாக ஒருங்கிணைப்போடும் தயார்ப்படுத்தலோடும் எதிர்கொண்ட தேர்தலாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் அமைந்தது. அதன்மூலம், மக்கள் வழங்கும் ஆணையை கூட்டமைப்புக்கான ஏக நிலைக்கும் பயன்படுத்த அவர் நினைத்தார்.

மாறாக, எந்தவொரு இடத்திலும், 13வது திருத்தச் சட்டத்தினை இறுதித் தீர்வாக முன்வைத்திருக்கவில்லை. இதுதான், கடந்த சில மாதங்களுக்கு முன்னரான காட்சிகளாக இருந்தன.

ஆனால், கடந்த சில மாதங்களாக, 13ஆவது திருத்தச் சட்டத்தினை, அதாவது மாகாண சபை முறையை தமிழ் மக்கள் அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற நிகழ்ச்சி நிரலொன்று மேலெழுந்திருக்கின்றது.

13வது திருத்தச் சட்டத்தினை தன்னுடைய கௌரவப் பிரச்சினையாகவே, இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து இந்தியா கருதி வருகின்றது.

மாகாண சபை முறையை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட சில தரப்புகள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுவிட்டன. ஆனால், அது தன்னுடைய அதிகாரத்தினை அல்லது கௌரவத்தினை உறுதிப்படுத்துவதற்கு போதாது என்பது இந்தியாவின் எண்ணம்.

அதனால்தான், முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னரான நாள்களில் 13ஆவது திருத்தச் சட்டத்தினை அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளுமாறு கூட்டமைப்பிடம் இந்தியா வலியுறுத்தியது. அதற்காகவே பல தடவைகள் கூட்டமைப்பை புதுடெல்லிக்கு அழைந்து மன்மோகன் சிங் சந்திப்பை நடத்தியும் இருந்தார்.

ஆனால், ஆரம்பத்தில் இந்தியாவின் வலியுறுத்தலை அமைதியாக உள்வாங்கிய கூட்டமைப்பு, அதனை அடுத்த கட்டங்களில் தீர்வாக ஏற்றுக்கொள்வதற்கு தயாரில்லை என்றும் அறிவித்திருந்தது.

அப்படியான நிலையில்தான், தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தினை தமிழ் மக்கள் தீர்வாக ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்கிற அடிப்படையிலான ஆய்வுகளும் கட்டுரைகளும் எழுதப்படுகின்றன.

அவற்றுக்குப் பின்னால், இந்தியா இருப்பதான சந்தேகம் பலமாகவே எழுந்திருக்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே, டெலோவின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற சந்திப்பையும் கருத வேண்டியுள்ளதாக தமிழ்த் தேசிய தரப்புகள் சந்தேகம் வெளியிடுகின்றன.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான தமிழரசுக் கட்சி, இன்னோர் அங்கத்துவக் கட்சியின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்ததும், அதனை உணர்ந்துதான் என்பது பலரது எண்ணம்.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும், இந்தியாவோடு இணக்கமாகவே இருக்க விரும்புகின்றார்கள். எந்தவொரு தருணத்திலும் இந்தியாவோடு தூசி அளவுக்குக் கூட முரண்பட்டுவிடக் கூடாது என்பது அவர்களின் நினைப்பு.

அண்மையில், முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறை வரை இடம்பெற்ற இழுவை வலை மடிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் போராட்டத்தில், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் கலந்து கொள்ளாமைக்கும் அதுதான் காரணம்.

குறித்த போராட்டத்தில், யாராவது இந்தியாவுக்கு எதிராக கோசம் எழுப்பிவிட்டால், அது தங்களுக்கு தர்மசங்கடத்தினை ஏற்படுத்திவிடும் என்பது அவர்களின் நினைப்பு.

அப்படி, இந்தியாவை அனைத்து விதத்திலும் சந்தோசப்படுத்த நினைக்கும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களினால்கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தினை தமிழ் மக்களுக்கான தீர்வாக அறிவிக்க முடியாது. அப்படி அறிவித்தால், அது அவர்களின் அரசியல் வாழ்வை இல்லாமல் செய்துவிடும் என்பது தெரியும்.

அப்படியான சூழலில்தான், புதிய சில அமைப்புகளை ஏற்படுத்தி, அவற்றின் ஊடாகப் 13ஆவது திருத்தச் சட்டத்தினை, தமிழ் மக்களுக்கான தீர்வாக வலியுறுத்தும் கட்டமொன்றை இந்தியா முன்னெடுப்பதான சந்தேகம் எழுந்திருக்கின்றது.

அதனால்தான், டெலோவின் அழைப்பினை தமிழரசுக் கட்சி புறக்கணித்திருக்கின்றது. தனி நாட்டு கோரிக்கைகளில் இருந்து, தமிழ்த் தரப்புகள் மீண்டும் சமஷ்டிக் கோரிக்கைகளுக்குள் தங்களை நிரல்படுத்தியிருக்கின்றன.

மாகாண சபை முறைமை, சமஷ்டிக் கோரிக்கைகளுக்கான அதிகாரங்களை கொண்டிருக்கவில்லை என்பதால்தான், 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்படியான சூழலில் சமஷ்டிக் கோரிக்கைகளில் இருந்தும் கீழிறக்கி, 13வது திருத்தத்துக்குள் சுருக்கும் தேவைப்பாடோடு செயற்படும் தரப்புகள் குறித்து, தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

டெலோவின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற கூட்டத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக வலியுறுத்தும் கோரிக்கையே பிரதானமாக அமைந்தது. அப்படியான நிலையில்தான், அந்தச் சந்திப்பின் நோக்கம் பலரினாலும் சந்தேகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றது. அதனை, தீர்க்க வேண்டியது டெலோவின் கடமை.

## கடிதங்கள்

சீனியை சலுகை விலையில்

### பெறமுடியாத துர்ப்பாக்கியம்

நாட்டில் சதொச கிளை இல்லாத பிரதேசங்களிலுள்ள மக்கள், சீனியை அரசாங்கம் அறிவித்துள்ள சலுகைவிலையில் பெறமுடியாத துர்ப்பாக்கியம் காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது ஒரு கிலோ கிராம் சீனி 145 ரூபாய் தொடக்கம் 160 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது என, லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் ரியல் அத்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சதொச தலைவர் கூறிய சலுகை விலை சீனியை, சதொச கிளை இல்லாத பிரதேச மக்கள், எவ்வாறு பெறுக்கொள்வவார்கள்? அதாவது, நாட்டு மக்களில் ஒரு சாராருக்கு அநீதி இழைக்கப்படுகிறது.

கடந்தகாலங்களில் இயங்கிவந்த காரைதீவு சதொச விற்பனை நிலையம், கடந்த வருடம் மூடப்பட்டதால், இப்பிரதேச மக்கள் அரசு அறிவிக்கும் நிவாரண விலைகளில் பொருட்கள் எதையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அந்தப் பொருட்கள் வரிசையில் சீனியும் வந்துள்ளது. சலுகை விலையில், சதொச சீனியை கொள்வனவு செய்யவேண்டுமெனின், ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கல்முனை சதொசவை நாடவேண்டும். அங்கு இப்படி சலுகைவிலை என்றால், நீண்டவரிசை இருக்கும். அந்தப் பிரதேச மக்களே முன்னுரிமை பெறுவர்.

எனவே, சதொச காரைதீவுக் கிளையை மீண்டும் திறக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

வி.ரி சகாதேவராஜா



LK Newspapers Viber Community

அயோத்தி

தீபாவளியை முன்னிட்டு

# அயோத்தியில் 12 இலட்சம் விளக்குகள்

தீபாவளியை முன்னிட்டு, 12 இலட்சம் அகல் விளக்குகளால் அயோத்தி அலங்கரிக்கப்பட்டுள்ளது. 14 ஆண்டுகள் வனவாசம் மற்றும் ராவணனை தோற்கடித்த பிறகு அயோத்திக்கு திரும்பும் ராமர், சீதையை வரவேற்கும் வகையில் அங்கு தீபாவளி கொண்டாடப்படுகிறது.

அயோத்தியில் சரயு ஆற்றங்கரையில் உள்ள படித்துறைகளில் 9 இலட்சம் விளக்குகளும், நகரின் மற்ற இடங்களில் 3 இலட்சம் விளக்குகளும் ஏற்றப்பட உள்ளன. இதன்மூலம் புதிய சாதனை படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆளுநர் ஆனந்திபென் படேல், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்



மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். யோகி ஆதித்யநாத் அழைப்பின்பேரில், மத்திய கலாசாரத்துறை மந்திரி கிஷன் ரெட்டியும் பங்கேற்கிறார். மேலும், நாட்டுப்புற கலைஞர்களின் நிகழ்ச்சி, ராமாயண சம்பவங்களை விளக்கும் அலங்கார ஊர்திகள் ஊர்வலம், ராமலீலா, லேசர் ஷோ ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சென்னை

# "என் மரணத்துக்கு யாரும் காரணம் இல்லை"

பாதுகாப்புத் துறை தலைவரின் மனைவி, 'தனது மரணத்துக்கு யாரும் காரணம் இல்லை' என கடிதம் எழுதி வைத்துவிட்டு, தனதுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலை அடுக்குமாடி குடியிருப்பை சேர்ந்த தம்பதிகளுக்கு, மகளும் மகனுமுள்ளனர். ஐ.ஏ.எஸ் அதிகாரியான கணவன்,சென்னை சாந்தோமில் உள்ள தமிழக அரசின் பாதுகாப்புத் துறை தலைவராக பணியாற்றி வருகிறார்.

இவரது மனைவி, கடந்த 2 ஆண்டுகளாக மன அழுத்தத்துக்கான சிகிச்சை பெற்று வந்ததாக கூறப்படுகிறது. இவரை கடந்த 6 மாதங்களாக அவரது மகள் தான் உடன் இருந்து கவனித்து வந்துள்ளார்.

கணவன் வழக்கம் போல வேலைக்கு சென்றுவிட்டார். அவரது மகனும் கல்லூரிக்கு சென்று விட்டார். மேலும் தாயை கவனித்து வந்த மகள் வெளியே சென்று விட்டார்.

இந்தநிலையில், மனைவி குளியல் அறைக்குள் சென்றுள்ளார். வெகுநேரமாகியும், குளியல் அறையில் இருந்து வெளியே வராததால், சந்தேகமடைந்த வீட்டு வேலைக்கார பெண், கதவை தட்டினார். ஆனால் கதவைமனைவி திறக்கவில்லை. இதையடுத்து அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது மனைவி கழுத்து அறுக்கப்பட்ட நிலையில், இரத்த வெள்ளத்தில் உயிரிழந்து கிடந்தார். உடலை மீட்டு ராயப்பேட்டை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், அவரது படுக்கை அறையில் இருந்த கடிதம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். அதில், 'மன அழுத்தத்தின் காரணமாக உயிரை மாய்த்துக் கொள்வதாகவும், தனது மரணத்துக்கு யாரும் காரணம் இல்லை' எனவும் எழுதி இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மும்பை

# குற்றச்சாட்டை நிராகரித்தார் சமீர் வான்கடே

விலையுயர்ந்த ஆடை மற்றும் கைக்கடிகாரம் அணிவதாக, மஹாராஷ்டிர அமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவருமான நவாப் மாலிக் கூறியுள்ள புகார்களை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மண்டல இயக்குனர் சமீர் வான்கடே மறுத்துள்ளார்.

போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் மண்டல இயக்குனராக உள்ள ஐ.பி.எஸ்., அதிகாரி சமீர் வான்கடேவுக்கு எதிராக, தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவரும், மாநில அமைச்சருமான நவாப் மாலிக் தொடர்ந்து பல குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றார்.

'நேர்மையான அதிகாரியான சமீர் வான்கடே, 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆடை அணிகிறார்; இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சப்பாத்தும் அணிகிறார்; 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைக் கடிகாரம் அணிகிறார். அவ்வளவு வருமானம் அவருக்கு எப்படி கிடைக்கிறதென மஹாராஷ்டிர அமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவருமான நவாப் மாலிக் கேட்கின்றார்.

இது குறித்து சமீர் வான்கடே கூறியுள்ளதாவது: விலையுயர்ந்த ஆடை, சப்பாத்து, கைக்கடிகாரம்



**விலையுயர்ந்த ஆடை, சப்பாத்து, கைக்கடிகாரம் அணிவதாக பொய்யான தகவல்களை நவாப் மாலிக் கூறியுள்ளார். அதேபோல், வழக்கறிஞரான என் சகோதரி குறித்தும் பொய் தகவல்களை, அமைச்சர் கூறி வருகிறார். போதைப் பொருள் கடத்தும் கும்பலைச் சேர்ந்தவர்கள் வாயிலாக என் குடும்பத்தாரை சிக்க வைக்க முயற்சி நடக்கிறது**

அணிவதாக பொய்யான தகவல்களை நவாப் மாலிக் கூறியுள்ளார். அதேபோல், வழக்கறிஞரான என் சகோதரி குறித்தும் பொய் தகவல்களை, அமைச்சர் கூறி வருகிறார்.போதைப் பொருள் கடத்தும் கும்பலைச் சேர்ந்தவர்கள் வாயிலாக என் குடும்பத்தாரை சிக்க வைக்க முயற்சி நடக்கிறது எனத் தெரிவித்தார்.

சென்னை

# கனமழை காரணமாக மரம் விழுந்து பெண் பலி

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் கனமழை காரணமாக பழமையான பாரிய மரமொன்று விழுந்ததில், முத்தியால்பேட்டை போக்குவரத்து பொலிஸ் பிரிவில் பணியாற்றி, வந்த கவிதா (வயது 45) நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். மற்றுமொரு பொலிஸ்காரர் காயம் அடைந்தார்.

இந்த விபத்தில் பெண் பொலிஸ் உயிரிழந்த சம்பவத்தை நேரில் கண்ட பெண்கள் பலர் கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

இந்த சம்பவம், தலைமைச் செயலகத்தில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியது. மரம் விழுந்து தாய் இறந்ததை அறிந்த பிள்ளைகள் கதறி அழுதது அனைவரையும் கண்கலங்க செய்தது.

இதேவேளை,மரம் விழுந்த இடத்தில் தினமும் முதலமைச்சர் தனிப்பிரிவில் மனு கொடுக்க ஏராளமானோர் வந்து ஒதுங்கி நிற்பார்கள். ஆனால் மழை காரணமாக அந்த



நேரத்தில் யாரும் வரவில்லை. இதனால் பெரும் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# தாயகம் திரும்பிய பிரதமர் மோடி

ஐ.நா.வின் பருவநிலை மாநாட்டை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பிய பிரதமர் மோடிக்கு, கிளாஸ்கோ விமான நிலையத்தில் திரண்டிருந்த இந்திய வம்சாவளியினருடன் உரையாடினார்.


இத்தாலி தலைநகர் ரோமில் ஜி-20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற 2 நாள் மாநாடு நடைபெற்றது. இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உள்ளிட்ட பல தலைவர்கள் பங்கேற்றனர். ஜி-20 மாநாட்டை முடித்துவிட்டு வாடிகன் சிட்டி சென்ற பிரதமர் மோடி, கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸைச் சந்தித்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஐ.நா.,வின் பருவநிலை மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார். அதில், பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்வது குறித்து பிரதமர் மோடி உரையாற்றினார்.





லட்சுமி பூஜை:

# தீபாவளியின் மிகப்பெரிய அம்சம்



இ. நடராஜன்

தீபம் என்றால் ஒளி , விளக்கு; வளி என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும்.

தீபத்தில் பரமாத்மாவும் நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து, அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கணம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும் . ஒரு தீயகுணத்தை எரித்துவிட வேண்டும்.

இந்துக்கள் தீபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின் வழியாகக் கூறுகின்றனர். அதன்படி, கிருஸ்ணனின் இருமனைவியருள் ஒருவரான நிலமகளுக்கு பிறந்த மகன் ஓர் அசுரன். அப்போது, கிருஸ்ணன் வராக (பன்றி) அவதாரம் எடுத்திருந்தார். பிறந்த அசுரனின் பெயர் நரகன்.

அந்நரகன் , தன் அன்னையால் மட்டுமே தனக்கு இறப்பு ஏற்பட வேண்டும் என்று வரம் வாங்கியிருந்தான். அவனின் அநீதிகளை நிறுத்த வேண்டி, கிருஸ்ணன் நரகாசுரனை இறக்க வைக்கிறான்.

கிருஸ்ணர், நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது, அவன், தான் இறக்கும் தினத்தை, மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்துக்கு இணங்க, தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது.

இராமாயணத்தில், இராமர், இராவணனை அழித்து விட்டு, தனது வனவாசத்தையும் முடித்து விட்டு, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நாளே, தீபாவளியாக கொண்டாடப்படுவதாகக் கருதப்படுகிறது.

கந்தபுராணத்தின்படி , சக்தியின் 21 நாள் கேதார விரதம் முடிவுற்ற இத்தினத்தில் தான், விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று, 'அர்த்தநாரீஸ்வரர் ' உருவமெடுத்தார்.

தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர். இல்லத்தின் மூத்தஉறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு ( மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை ) இட்டு மகிழ்வர். பின்னர் எண்ணெய்க் குளியல் ( கங்கா குளியல் )

செய்வர் . நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சிலரது வழக்கம் . மக்கள் புத்தாடை உடுத்தியும் பட்டாசுகள் வெடித்தும் மகிழ்வர்.

**பாரம்பரிய உடைகளை அணியவதே சிறந்தது. பெண்கள் சாறியும் [பட்டுச்சாறி] ஆண்கள் வேட்டியும் உடுப்பர். ஒவ்வோர் இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும்**

பொதுவாக தீபாவளி அன்று பாரம்பரிய உடைகளை அணியவே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர் . அன்று அநேக பெண்கள் புடவையும் (குறிப்பாக பட்டுப்புடவை) ஆண்கள் வேட்டியும் உடுப்பர். தீபாவளி அன்று ஒவ்வோர் இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும். அன்று, இனிப்புகள் நிறைய செய்து, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர்.

**தீபாவளியின்போது செய்ய வேண்டியவை:**

1. குளிப்பதற்கு முன்பு, எண்ணெய் பூச வேண்டும்.
2. உங்கள் பரம்பரைக்கு மரியாதை செலுத்துவதற்கு முன்னோர்களின் வணக்கம் செய்ய வேண்டும். பிரதோச காலத்தின் போது, ஆவிகள் வழிகாட்டவும் அவர்களுக்கு சொர்க்கத்துக்கு ஏற உதவவும் விளக்குகள் எரிய வேண்டும்.
3. தீபாவளிக்கு முந்தைய நள்ளிரவு கொண்டாட்டம் வீட்டிலிருந்து வறுமையை அகற்ற உதவுகிறது.
4. வீட்டைச் சுத்தம் செய்து, லக்ஷ்மி பூஜைக்கு முன் தூய்மையின் சாரத்துக்காகப் புனித நீர் தெளிக்கவும். களிமண் விளக்குகள், கோலங்களால் வீட்டை அலங்கரிக்கவும்.
5. பூஜைக்காக ஒரு சிவப்பு துணியை விரித்து, லக்ஷ்மி தேவி, விநாயகர் சிலைகளை அதன் மேல் வைக்கவும். இரண்டின் படத்தையும் ஒரே நோக்கத்துக்காகப் பயன்படுத்தலாம்.
6. லட்சுமி தேவி மற்றும் விநாயகர் மீது மஞ்சள், குங்குமம் பொட்டு வைக்கவும். ஒரு விளக்கை (களிமண் விளக்கு) ஏற்றி, சந்தனம், அரிசி, மஞ்சள், குங்குமப்பூ, அபீர், குங்கமம் போன்றவற்றை வைத்து உங்கள் பக்தியை வழங்குங்கள்.
7. லட்சுமி பூஜைக்குப் பிறகு, சரஸ்வதி, காளி தேவி, விஷ்ணு, குபேர் ஆகியோரை வணங்குவது சடங்குகளின்படி செய்யப்படுகிறது.
8. பூஜைகள் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து செய்யப்பட வேண்டும்.
9. லட்சுமி பூஜையைத் தொடர்ந்து, புத்தகங்கள், கழிப்பிடங்கள், வணிகம், செல்வம் தொடர்பான பிற உபகரணங்களுக்கு மரியாதை செலுத்தலாம்.
10. பூஜை முடிந்ததும், இனிப்புகள், பலகாரம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

லட்சுமி பூஜை, தீபாவளியின் மிகப் பெரிய அம்சமாகும். லட்சுமி தேவி, விநாயகர், சரஸ்வதி தேவி ஆகியோர் மாலை, இரவு நேரங்களில் போற்றப்படுகிறார்கள். புராணங்களின்படி, லட்சுமி தேவி பூமிக்கு இறங்கி, ஒவ்வொரு

**தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம், அதிகாலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும் எண்ணெயில் லட்சுமியும் வசிப்பதாகும்**

வீட்டையும் பார்வையிடுகிறார்.

எந்தவொரு வீடும் நேர்த்தியான மற்றும் காலம், தெய்வத்தால் வசிக்கத் தேர்ந்தெடுக்கப் படுகிறது; எனவே லக்ஷ்மி தேவியைப் பிரியப்படுத்தவும். அவரது தெய்விக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும். இந்தச் சரியான தருணத்தில் வீட்டை முறையாகச் சுத்தம் செய்து, விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்பட வேண்டும்.

தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம், அதிகாலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும் எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும் குங்குமத்தில் கௌரியும் சந்தனத்தில் பூமாதேவியும் புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும். அன்றைய தினம், எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும் நீர்நிலைகளிலும் 'கங்கா தேவி' வியாபித்து இருப்பதாக ஐதீகம் .





சீனா

# 30,000 பேரை பூங்காவுக்குள் அடைத்த சீன அதிகாரிகள்


சீனாவில் டிஸ்னிலேண்ட் கேளிக்கைப் பூங்காவுக்குள் 30,000 பேருக்கும் மேற்பட்டோரை அடைத்து வைத்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் அங்கு மூன்றாம் அலை ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு விட் சீரோ திட்டம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் மொத்தமாக அவர் இருக்கும் பகுதியை முடக்குவதோடு அவர் கடந்த 21 நாட்களில் சந்தித்த எல்லோரையும் கண்டுபிடித்து உடனே அவர்களை தனிமைப்படுத்துவது ஆகும்.

இந்நிலையில் சீனாவின் ஷாங்காயில் உள்ள டிஸ்னிலேண்டிற்கு நேற்று முன்தினம் சென்று வந்த பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து வேகமாக செயல்பட்ட அதிகாரிகள் மொத்த டிஸ்னிலேண்ட் பூங்காவினையும் பூட்டிவைத்துள்ளனர்.



இதன் போது அப் பூங்காவில் 30 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அவர்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், அவர்களுக்கான உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தான்

# வறுமையால் குழந்தைகளை விற்கும் பெற்றோர்கள்

ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் அந்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன.

மேலும் பல்வேறு நாடுகளும் வர்த்தக ரீதியிலான உறவைக் கடைபிடிக்கத் தயங்கி வருவதால் அங்கு தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடிகள் நீடித்து வருவதாகவும் இதனால் மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்த பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதாகவும், வறுமையின் காரணமாக



சிலர் தங்கள் குழந்தைகளை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் தமது பருவ வயதுப் பெண் பிள்ளைகளை வயது முதிர்ந்த ஆண்களுக்கு பணத்திற்காக பெற்றோர்கள் திருமணம் செய்து கொடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சீனா மீதான மதிப்பை உலகம் இழந்து வருகிறது

அமெரிக்கா

அண்மையில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில் சீனா கலந்து கொள்ளாதது மிகப் பெரிய தவறு எனவும், இதனால் உலகம் சீனா மீதான மதிப்பை இழந்து வருவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் “சீன ஜனாதிபதி சீ ஜிங்பிங் மிகப்பெரிய தவறு செய்து விட்டார் என்றும் ஐநாவின் பருவ நிலை மாநாட்டை புறக்கணித்த சீனா மற்றும் ரஷ்யா எதிர்காலத்தில் தங்கள் மக்களுக்கு என்ன பதிலைக் கூற முடியும்” என்றும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

## பேஸ்புக் நிறுவனம் எடுத்த அதிரடி நடவடிக்கை

சமூகத்தில் முக அடையாளத் தொழில்நுட்பத்தால் (Facial recognition system) பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமை காரணமாக குறித்த முறையை நீக்கத் தாம் முடிவு செய்துள்ளதாக பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இதற்காக சுமார் நூறு கோடிப் பயனாளர்களின் தரவுகள் அழிக்கப்படும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொலம்பியா



# நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழப்பு

கொலம்பியாவில் பெய்த தொடர் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அந்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள மல்லாமாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்ததால் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டதை அடுத்து, நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருவதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான்

## இராணுவ வைத்தியசாலையில் குண்டு வெடிப்பு; 25 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகர் காபூலில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் பயங்கரவாதிகள் உட்பட 25 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளனர்.





இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்:

# அரையிறுதியில் பாகிஸ்தான்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நமீபியாவுடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியிலும் வெற்றியைத் தொடர்ந்தே அரையிறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 189/2 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: மொஹமட் றிஸ்வான் ஆ.இ 79 (50), பாபர் அஸாம் 70 (49), மொஹமட் ஹபீஸ் ஆ.இ 32 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: டேவிட் விஸே 1/30 (4), ஜான் பிரைலிங்க் 1/31 (4))

நமீபியா: 144/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் விஸே ஆ.இ 43 (31), கிரேய்க் வில்லியம்ஸ் 40 (37), ஸ்டீஃபன் பார்ட் 29 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: இமாட் வசீம் 1/13 (4), ஹஸன் அலி 1/22 (4), ஹரிஸ் றாஃப் 1/25 (4))

போட்டியின் நாயகன்: மொஹமட் றிஸ்வான்

இதேவேளை, மற்றைய குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் பங்களாதேஷை தென்னாபிரிக்கா வீழ்த்திருந்தது.

இந்நிலையில், டுபாயில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் அவுஸ்திரேலியாவும் பங்களாதேஷும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு அபு தாபியில் நடைபெறவுள்ள போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை இலங்கை எதிர்கொள்கிறது.






## டொட்டென்ஹாமில் தொடரவுள்ள கேன்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான ஹரி கேன், அக்கழகத்திலேயே தொடருவார் எனக் கூறப்படுகிறது.

டொட்டென்ஹாமின் முகாமையாளரான அன்டோனியோ கொன்டே நியமிக்கப்பட்டதையடுத்தே, டொட்டென்ஹாமிலிருந்து விலகும் திட்டத்தை கேன் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்பு பருவகாலத்தில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்குச் செல்ல கேன் முயன்ற நிலையில் அது நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இந்தியாவின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர்

## பதவிக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ள ரத்தோர்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்கு அப்பால் இந்திய அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவதற்கு மீள விண்ணப்பித்துள்ளதாக இந்தியாவின் தற்போதைய துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் விக்ரம் ரத்தோர் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டில் சஞ்சய் பங்கரை விக்ரம் ரத்தோர் பிரதியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பியன்ஸ் லீக்:

## சமநிலையில் யுனைட்டெட் அத்லாண்டா போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான குழு எஃப் போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கிறிஸ்டியானோ றொனால்டோ பெற்றதுடன், அத்லாண்டா சார்பாக, ஜோசிப் இலிசிச், டுவான் ஸபட்டா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



இந்நிலையில், ஸ்பானிய லா லிகா கழகமான செவில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு ஜி போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லி வென்றது.



## டொட்டென்ஹாமின் புதிய முகாமையாளராக கொன்டே

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரானது, இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் முன்னாள் முகாமையாளரான அன்டோனியோ கொன்டேயை முகாமையாளராக நியமித்துள்ளது.

நீடிக்கும் தெரிவு ஒன்றைக் கொண்ட எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரையான ஒப்பந்தம் ஒன்றை கொன்டே கைச்சாத்திட்டுள்ளார்.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 04 நவம்பர் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.